# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Cey
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௪] யாழ்ப்பாணம்:- நந்தன வரு கார்த்திகை மீ ௩ உ செவ்வாய்க்கிழமை (18 Nov. 1952) [இல - ௬௦]

# தம்பலகமத்தில் ஸ்ரீ சுத்தானந்தர்

## சாரதா வித்தியாலய அத்திவார விழா

### சமரச சன்மார்க்கம்—அதுவே உலக அமைதிக்கு வழி

( திரு. பொ. கந்தையா அவர்கள் எழுதியது )

14-11-52 வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் திருக்கோணமலையிலிருந்து தம்பலகமம் கோணேசர் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஆலயத்தைத் தரிசித்துக் கொண்டு ஊர்வலமாகப் புறப்பட்டு ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தாரால் ஆரம்பிக்கப்பெறும் ஸ்ரீ சாரதா வித்தியாலயத்துக்கென தம்பலகமம் மக்களால் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு முதலில் சுவாமிகளே பிரார்த்தனையை நடத்தினார்கள். பின் சுவாமிகள் வித்தியாலயக் கட்டிடத்துக்கு அத்திவாரக் கல் நாட்டினார்கள். பல அன்பர்கள் வித்தியாலயத்தின் நோக்கங்களைப் பற்றியும் சுவாமிகளின் வருகையைப்பற்றியும் பேசினார்கள். பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் பெண்களும் பெருங் கூட்டமாக வந்து சுவாமிகளைத் தரிசித்தார்கள். மத்தியானம் சுவாமிகள் கோணேசர் ஆலயத்தில் தங்கியிருந்துவிட்டு பின்னேரம் திருகோணமலை கோணேசர் ஆலயத்துக்குப் புறப்பட்டார்கள.

சுவாமிகள் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:-

எல்லாச் சமயத்தவர்களும் தங்கள் சமயக் கருத்தைக்களை உலகெங்கும் பரப்புகிறார்கள் எங்கள் சைவசமயந்தான் இன்று அனாதைச் சமயமாக உள்ளது. எங்கள் சமயத்தவர்கள் போதிய பிரசாரஞ் செய்வதில்லை. எனினும் ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தார்தான உண்மையான சமரசமான உன்னதமான சமயக் கருத்துக்களை இன்று உலகெங்கும் பரப்பி வருகிறார்கள் இன்று தொழாயிரம் சந்நியாசிகள் வரையில் தமது வாழ்வை ஊழியத்துக்குத் தியாகம் செய்து உழைத்து வருகிறார்கள். இவர்களுள் மறைந்துபோன விபுலானந்தர் மிகச் சிறந்தவர்; தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டு செய்தவர். அவரது கலைப்பணி இன்னுஞ் சிலகாலம் நீடித்திருந்தால் இலங்கை முழுவதும் விபுலானந்த மயமாயிருக்கும். அவர் பணிக்கு ஞாபகங்கள் அமைப்பது உங்கள கடமையாகும.

இந்த நாட்டில் சிங்களத்தை வளர்ப்பதற்குப் பல முயற்சிகள் நடைபெறுகின்றன. எங்கள் தமிழை வளர்க்கும் முயற்சிகள் மிகக் குறைவு. தமிழுஞ் சைவமும் இணைபிரியாத் தொடர்புடையன. தமிழ் வளரச் சைவம் வளரும். சைவம் வளரத் தமிழ் வளரும். தமிழர் வீழ்ச்சியடைந்தது தமிழையுஞ் சைவத்தையும் பரப்பாத காரணத்தாலேயாம். எண்ணங்கள் விசாலமாக்கப்பட்டு சமரச சன்மார்க்கம் போதிக்கப்படவேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கத்தார் இன்று செய்யும் சமரசப்பணி மிகவும் பொருத்தானது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தோற்றிய தோடு ஸ்ரீ விவேகானந்தர் போன்ற ஒப்பற்ற சீடர்களையும் பல அறிவாளிகளையும் நமக்குத் தந்துள்ளார்கள். இவர்களுக்குப் பின்பே இந்தியாகூட விழிப்படைந்தது. ஒரு நாட்டுக்கு அணிகலன் யோகிகளேயாகும். எங்களை உபயோ

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# உடலை மறந்து வாழ உணர்தல்வேண்டும்!

## சுத்தானந்த யோகிகள் சொற் பெருக்கு

**மட்டக்களப்பு விவேகானந்தமண்டபம்**

மட்டக்களப்பு விவேகானந்த மண்டபத்தில் தமிழ்க்கலை மன்றச் சார்பாய் மன்றத்தலைவர் பண்டிதர் ஆ. சபாபதிஅவர்கள் அன்பு செறிந்த பல இன்னுரைகளால் சுவாமிகளை வரவேற்றனர்,

சுவாமிகள் பேசப்பொழுது தம்மைக் குறித்த இன்னுரைகளெல்லாம் தில்லை நடராசப்பெருமானுக்கேயுரியவையென்றும், நாம் என்றும் மறவாது இறைவழிபாடுசெய்தல் வேண்டுமென்றும் கூறித் தாம் 'பாரதசக்தி மகா காவியம்' எழுத நேர்ந்த வரலாற்றை விளக்கும்பொழுது யோக சாதனையில் மகா துரிய நிலையைத்தாம் அடைய வேண்டுமென்றும் தமிழ்க்கலைகளையும் சைவசமயத்தையும் எங்கும் பரப்பவேண்டுமென்றும் தட்சிணாமூர்த்தி சந்நிதியிலிருந்து தவஞ் செய்து உறுதிபெற்ற பயனாக முதலில் உண்டானது பாரத சக்தி மகாகாவியம் என்றும் பாரத நாட்டின் பெருமை வேதாந்தம் சித்தாந்தம் யோகம் ஆகியவற்றிலேயே தங்கியிருக்கின்றதென்றும் தமிழ்மொழி சொல்வளம் நிறைந்ததென்றும் அதை வளம்பெறச் செய்தற்கு விஞ்ஞான நூல்களைத் தமிழில் இயற்ற வேண்டுமென்றும், புதிய காவியங்களை ஆக்கவேண்டுமென்றும் கூறினர்.

**மாந்தீவு**

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலையிலே பேசும்பொழுது நாம் உடலை மறந்து வாழப்பழக வேண்டும். அப்படி மறந்து வாழ்தற்குக் கடவுட்டியானம் இன்றியமையாது! உடலுக்கேயன்றி உயிருக்கு நோயில்லை, உடல் சுத்தமாயிருந்தால் நோயணுகமாட்டாது, மனமே உடல் நோய்களுக்குக் காரணம், பொறாமையால் மூலநோயும் கோபத்தால் மூலக் கொதிப்பும் உண்டாகின்றன என்று பொதுவாகவும், காலைக் கடன் முடித்து, களிமண், வேப்பிலை, ஆவரை இலை ஆகியவற்றை அரைத்து உடலிற் பூசி அதை காயும்வரையும் சூரிய ஸ்நானம் செய்து பின் தலையும் காலும் தவிர்ந்த உடலின் பிற பாகத்தைத் தண்ணீருள் அமிழ்த்தி அடி வயிற்றைத் தேய்த்துத் தேகத்தைத் துடைத்து மருந்திடுதல் வேண்டுமென்றும் காமவேட்கைகளை நீக்க வேண்டுமென்றும் மச்சமாமிச உணவைத் தவிர்த்துத் தாவர உணவை அவற்றுள்ளும் பொன்னாங்காணி, வல்லாரை ஆகியவற்றை அதிகமாய் உட்கொண்டு இறைவனிடத்தில் சிந்தையை வைக்க வேண்டுமென்றும் குஷ்டரோகிகளுக்குச் சிறப்பாகவும் கூறினார்.

**மண்டூர்**

மண்டூரிலே பேசும் பொழுது இல்லறம் நல்லறமாவதற்கு நாம் எப்பொழுதும் தியானம் செய்ய வேண்டும், கடவுள் வழிபாட்டை மறக்கக்கூடாது திருவாசகத்தின் அருட்டன்மையை நோக்கித் தமிழ்ப் பாடல்களைப் பாட வேண

தொடர்ச்சி 3-ம் பக்கம்

### சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ!

திருச்சிற்றம்பலம்.

பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையும்
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ!

திருச்சிற்றம்பலம்.

அரசியல் அரங்கு

# வயது போகப் போக அறிவு வளம் பெருகுகிறது

## அரசியல் வானில் ஒளிச் சுடர் நேரு!

### அறுபத்து மூன்றாவது பிறந்த தினம்

ஆண்டுகள் கழிய அறிவு பெயருவதுதான் வழக்கம். வயது சென்றால் வீட்டிற்கு வேறு காவல் வேண்டாம் என்றும் சொல்வார்கள், இது பொதுவிதி. புறநடையாகவுள்ளவர்கள் சிலரினும் சிலரே! அதிலும் அரசியல் வட்டாரத்தில் அரிதினும் அரிதே.

அந்த அரிய மனித மாணிக்கந்தான் பிரதமர் நேரு. அறுபத்துமூன்றாட்டை அரசியல் ஞானி ஆக அறிவுச்சுடர் வீசுகின்றார். சொல்லவொண்ணாச் சுவையுடைத்தாகின்றமையோடு பொருளுடைத்தாய் ஆழமுடைத்தாய் இருக்கின்றமையே இப்பெரியாருக்குப் பெருமதிப்பைக் கொடுக்கின்றது.

அரசியல் அமைச்சென்றால் அது ஓர் நுண்மதி அமைப்பென்பதைப் பிரதமர் நேரு கண்கூடாகக் காட்டி வருகின்றார். கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ என்றபடி பிரதமர்கள் எல்லாரும் பிரதமர்களல்லர்.

இலங்கை இந்தியப் பேச்சுகளிற் பிரதமர் நேருவின் பொன் மொழிகள் அமைச்சர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கின்றன. ஆனால் முத்துக்களை வீசிவிட்டால் போதுமா ஆர்முன் வீசல் என்றகேள்வியுமுண்டல்லவா?

பல்லாண்டுவாழ்க அமைச்சர் திலகம் நேருஎன்று உலகம் உவந்து போற்றி வாழ்த்துகின்றது.

### மலான் மதி விளக்கம்

வேறு நிறத்தவருக்கு வேறு வாக்காளர் இடாப்பென மலான் அரசாங்கம் உருவாக்கிய பாராளுமன்ற உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பைத் தென் ஆபிரிக்க உயர் நீதி மன்றம் நிராகரித்துவிட்டது. அத்தீர்ப்பைத் தாம் ஒப்புக்கொள்ளுவதாக மலான் கூறுகின்றார். ஆனால இவ் விஷயத்தில் மக்களுடைய தீர்ப்பு என்னவென்று வருகின்ற தேர்தலில் தாம் அறியவிருப்பதாகவும் கூறினர்.

### 8-ம் வகுப்புப் பரீட்சை

எட்டாம் வகுப்புப் பரீட்சை வேறொன்று நடக்கமாட்டாதென்று வித்தியாதிகாரி கூறுகின்றார். பரீட்சை வினாக்கள் பலவிடங்களில் பரவவில்லை யென்பது அவருடைய நியாயமாம்.

# நாவலர் படத் திறப்புவிழா

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களுடைய திருஉருவப் படத்தை ஸ்ரீ யோகி சுத்தானந்தபாரதியார் அவர்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் '19—11—52 புதன்கிழமை மாலை 6-45 மணியளவில் திறந்து வைக்க இசைந்துள்ளார்கள்.

அச்சமயம் சமுகந்தருமாறு சைவஅன்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சைவபரிபாலனசபை, 17-11-52.

அ. அருளம்பலம், கௌரவகாரியதரிசி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஹு கார்த்திகைமீ 4உ செவ்வாய்க்கிழமை

## நோயாளர்களுக்கா இந்த விதி?

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து,

என்று நெறி அறமுரைத்த வள்ளுவனர் குறிப்பிட்டாங்கு எந்த நாடும் பிணியின்மையையே பெரிதாகக் கருதவேண்டும். நோயற்ற வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை ஆக்கிவைப்பதவும் நோய்வாய்ப்பட்டாருக்கு மருந்துதவி மறலியினின்றும் விடுபடச் செய்வதவும் பிணியின்மையை நாடும் நாட்டமைச்சர்கள் செய்யவேண்டியன.

நோயாளருக்கு வைத்திய வசதிகள் போதியன வாயில்லை என்றும், இன்னமும் வேறு குறைகளைக் காட்டியும் பல முறைகளிலும் நாம் குறிப்பிட்டோம். அவை ஒருபுறமிருக்க வைத்தியசாலைகளில் இக்கால முறைப்படி இயந்திர அமைப்புகளினுல் அறியக்கூடிய சில நுணுக்கமான நோய் விபரங்களைத் தெரிந்துகொள்வதற்காகப் பல்லாயிரக் கணக்கான பொன் பெறுமதியுள்ள உபகரணங்கள் இலங்கை அரசாங்கத்தாரால் வரவழைக்கப்பட்டிருந்தும் அவற்றுட் சில அவற்றை இயக்கும் நிபுணர்கள் இல்லாமையாலும் சில உறுப்புக்கள் யாவும் ஒருங்குசேர்க்கப்படாதிருக்கின்றமையாலும் சிலவற்றிற்கு வேண்டிய உபகரணங்கள் பெறப்படாமையாலும் பெறப்பட்டவை மூடிக்து விட்டமையாலும் உபயோகிக்கப்படாதிருக்கின்றனவாம்.

இருதய நோயாளர் உள் உடல் ஊன்பட்டவர்கள் இன்னம் இவ்வகையான அபாயகரமான பிணியாளர்கள் தகுந்த வைத்தியம் செய்விக்க முடியாத நிலைமையில் இருக்கின்றார்கள் என்றால் அரசாங்கம் இதற்கு என்ன சமாதானம் கூறமுடியும்? அரைகுறையாக அலுவல்களைச் செய்வதே அரசாங்க அமைப்பின் அழகென்று இலங்கைதான் காட்டுகின்றது போலும். கொழும்பு மாநகரிலுள்ள மாபெரும் வைத்திய நிலையத்தில் உபகரணங்கள் பல உபயோகிக்கப்படாதிருக்கின்றன வென்பதைப்பற்றி ஆராய ஓர் விசாரணைக் குழு அமைக்கப்பட்ட தென்றால் உண்மையில் நிலைமை சீர்கேடாகவே யிருக்கவேண்டும்.

அரசாங்கச் செலவுக் கணக்குகளை ஆராய்ந்து பார்க்கு மவர்க்கே எவ்வளவு பணம் வீணாக விரயஞ் செய்யப்படுகின்றதென்று புலப்படும். ஏழை மக்களுக் குணவு இயன்றளவு கொடுக்கமுடியாது, அரிசி விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறிக்கொண்டு பிறிதிடத்தில், வீணே வாரி வீசி விடுவதற்குப் பொன் எங்கே இருக்கிறது? நோயாளர்களுக்கு ஆண்டாண்டு தோறும் ஏராளமாகப் பணம்செலவு செய்கின்றோமென்று வீரமாகக் கூறிவிட்டுப் பிணியாளர்களுக்கு ஒருவிதமான உதவியும் அளிக்காது விடுவதானுல் அரசாங்கம் உடல்நலம் அற்று உயிர் விடுமவர்களின் பழிக்காளாகாது போக முடியுமா?

படுக்கைகள் இல்லை, மருந்தில்லை, பார்க்க வைத்தியர்கள் இல்லை என்ற குறை தீர்ந்தபாடில்லை. உபகரணங்களும் தேடுவாரற்று மூலைக்குமூலை ஒதுக்கப்பட்டுபயோகிக்கப்படாதிருக்க வேண்டுமேயானுல், அரசாங்கம் ஊரவர்களின் தேகநலப் பாதுகாப்பைத் தனிப்பட்டவர்கள் நடத்தும் வைத்தியசாலைகளிலே விடுவது புத்தியாகும். நோயாளிகளுக்கு அரசாங்கம் என்ன உதவி அளிக்கின்றது என்று ஊரவர்களால் மனம் நொந்து பழி சுமத்தப்படுவது மக்கள் ஆட்சி முறைக்கு அழகல்ல. செய்வன திருந்தச்செய் என்ற ஒழுங்கை அரசாங்கம் நன்கறிந்தமைந் தொழுகுதல் வேண்டும்.

# வாழ்க்கை வானில்

வளர்மதி

### மலான் புத்தியறிந்துவிட்டாரா?

தென்னுபிரிக்க நீதிமன்றத் தீர்ப்பை விரும்பினுல் என்ன, வேண்டாதுவிட்டால் என்ன மலான் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமை வந்ததும் அவர் ஏறுவிட்டாராம். ஆனுல் அடுத்த பொதுத் தேர்தலிலே பாராளுமன்றத்தின் தனிப்பெருந் தத்துவத்தை நிலைநாட்ட வாக்காளர்கள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று யோசனை கூறுகின்றாராம். நீதிமன்றம் புத்தி புகட்டியும் ஒருபோதும் நீதியைச் செய்யமாட்டேனென்று வாதடும் மலான் போன்றவர்கள இக்காலக் கோலத்தின் அறிகுறிகளாகவே தோன்றியிருக்கிறார்கள். கிட்லர் மாமா பட்ட துன்பம் அறிந்தும் அறியாத மலானுக்கு தென் ஆபிரிக்க வாக்காளர்கள் தக்க பதில் அளிக்க மாட்டார்களா?

### நேருவின் நிதான புத்தி

மலானுக்கு நேர் எதிரான மதிபடைத்த பெரியார் நேரு என்பதை மேனுட்டார் இனியாவது அறியமாட்டாரா? பாகிஸ்தானத்தின் பகிரங்க இந்து வெறுப்பு மனப்பான்மையைக் கண்டிக்கு முகத்தாக இந்திய நாட்டிலுள்ள பாகிஸ்தானியர்களுக்கு இடைஞ்சலை வருவிக்க வேண்டுமென்று இந்து மகாசபை அங்கத்தவர்கள் இந்திய பாராளுமன்ற மக்கள் சபையிலே ஆலோசனை கூறியபொழுது கண்கள் சிவக்க நெஞ்சம் நடுங்கி நேருப் பெரியார் தீமைக்குத் தீமை செயயும் சிந்தனை கொடிது கொடிது என்று சினந்துமுழங்கினாராம்.

காந்திப் பெரியாரின் கழலிணையிற் கடுந்தவம் புரிந்த நேரு அண்ணலின் புத்தி நிதானமாயிருப்பது நூதனமா?

# நாரந்தனைச் சைவ மகாசபை

## வருடாந்தப் பொதுக் கூட்ட வரலாறு

மேற்படி சபையின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் 8-1-52 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு நாரந்தனைக் கணேச வித்தியாசாலை மண்டபத்தில் திரு. த. தில்லைநாதர் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

காரியதரிசியால் சென்ற கூட்ட வரலாறும் வருடாந்த அறிக்கையும், தனதிகாரியால் வரவுசெலவுக் கணக்கும் படிக்கப்பட்டன. 11-7-52 அரசினர் பத்திரிகையில், நாரந்தனைச் சைவ மகாசபைக்கு அம்பாள் ஆலயம் அமைக்க ஏக்கர்நிலம் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரசுரிக்கப்பட்டதின் பிரதி ஆசிரியர் மூ. மயில்வாகனம அவர்களால் வாசிக்கப்பட்டது.

அம்பாள ஆலயக் கட்டட நிதிக்காகப் பணஞ் சேர்க்கும் பொருட்டு, அச்சிட்டு வெளியிடவிருக்கும வேண்டுகோட் பத்திரம் வாசிக்கப்பெற்றது.

பின்வரும் புதுவருட உத்தியோகத்தர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. நா. நடராசா, காரியதரிசி திரு சி. கைலாயபிள்ளை, தனதிகாரி திரு வி.நமசிவாயம், உபதலைவர் திருவை தம்பு, உப காரியதரிசி திரு. செ. இராசதுரை இவர்களுட்பட திருவாளர்கள த. தில்லைநாதர், க. கணபதிப்பிள்ளை. சு. சண்முகம், வை. கண்ணுத்துரை, வீ. தம்பையா, நா. கந்தஞானி, க. வேலாயுதபிள்ளை, ச. லோகநாதபிள்ளை, வி. வேலுப்பிள்ளை, நா. குணரத்தினம் என்போர் திருவாக சபையினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பினவரும் பிரேரணைகள் நிறைவேறறப்பட்டன.

1 சங்கத்தின் கோரிக்கைக் கிசைந்து அம்பாள் ஆலயம் [illegible] அரசாங்கத்துக்கு மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

2 நிலம் சாதனமூலம் சபைக்குச் சேர்ந்தவுடன் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களைக்கொண்டு ஆலயம் அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்யவேண்டும்.

தலைவர் முடிவுரையின் பின் கூட்டம் இரவு 9 மணியளவில் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

# பொருள் அறிய மொழி உபயோகிக்கப்பட வேண்டும்!

## வாழ்க்கைப் பண்பாட்டில் தமிழின் தனிச் சிறப்பு

அநேக நூற்றுண்டுகள் அடிமைத்தளையிற் கட்டுண்டு கிடந்த எம்மவர் இனி எம்வாழ்வு எத்துறையில் உருவாக்கப்படவேண்டுமென்பதை அறியாது தவிக்கின்றனர். மக்கட் பண்பின் வெளிப்பக்கம் நாகரிகம் எனப்படும். சொல்வாழ்வின் புற நிகழ்ச்சிகளைக் குறிக்கத்தொடங்கவே, கலாசாரம் என்றசொல் அகநிகழ்ச்சிகளின்

"சோமன்"

வெளிப் பக்கத்தைக் குறிக்கத் தொடங்கிற்று. உண்டிருந்து வாழ்வதற்கே மொழிகற்று நாளின் இருபத்துநான்கு மணியையும் செலவிட்ட இலங்கைவாழ் மனிதஇனம், இன்று உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெருமளவிற் பெறுவதுடன் கலாசார வளர்ச்சிக்கும் பெருமுயற்சி செய்வதாகப் பறை சாற்றுகின்றது. புறவாழ்வுக்கு முன் மாதிரியாக எந்த ஐரோப்பிய நெறியை ஏற்றுக்கொண்டோமோ அந்த மக்களது வழியையே அகவாழ்வுக்கும் எடுத்துக்காட்டாகக் கொண்டுள்ளோம். ஆகவே மேலும் நாம் கலாசாரத் துறையில் முன்னேறுவதற்கு ஆங்கிலத்தின் உதவி பெற்று, மேலைத் தேயத்தின் இனிய கனி எம்மண்ணில் விளைந்து பழுக்கும்வண்ணம் அவர் தம் கலாசாரக்கிளையை எம் வாழ்வாகிய மரத்திலே ஒட்டிவிடவேண்டும் என்ற கருத்து உலவுகிறது. உள்ளூர்ப்பழம் புளிமா எனக் கருதுவதுடன், பிற ஊர்ப்பழம் நிச்சயமாக இனிக்கும் என்ற நம்பிக்கையும் நாம் கொண்டுள்ளோம். தாகூர் மேலைத்தேயக் கலப்பாலேயே புதிய இந்தியாவின் கவியானுர் எனப் பேசுகின்றனர். எயட்வா, ஷேக்ஸ்பியர், சிற்பிகள், எழுத்தாளர்கள் பிறநாட்டில் எங்ஙனம் வளர்ச்சி பெறுகின்றனர் எனக் காண்டலால் எங்கள் கலைகள் வளரும் என்கின்றனர். பிறகலாசாரத்தின் தாக்கம் நம் கலாசாரத்தைச் செழித்து ஓங்கச் செய்யும் என்று அதை வரவேற்கின்றனர். இந்நிலை எம்மைச் சிந்தனையில் ஆழ்த்துகின்றது.

எம் சித்திரம் எமக்குச் சில பாடங்களைப் போதிக்கும். சங்கத் தமிழரின் வாழ்வு சமண பௌத்தக் கலப்பால் சீர்குலைந்தது. அரசியல் ஆதிக்கத்துடன் கலாசார ஆதிக்கமுஞ் சேர்ந்து தமிழினத்தை இலக்குத் தவறிய இனம் ஆக்கின. காவியங்கள் என்ற புதிய இலக்கியச் சிருஷ்டிகள் எழுந்தன. சொல் அழகும் அணியழகும் நிறைந்த அவை தமிழனின் பழம்பெரும் சிந்தனை உயர்வையும் அசைத்தன. நாட்டுக்கு ஒவ்வாத பழக்க வழக்கங்கள், கருத்துகள் புகுந்தன. ஐம்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# மதுவிலக்குமகாசபைப் பிரசாரம்

## சாவகச்சேரியில் சாராய நீக்கம்

வியாழக்கிழமை 13-11-52 மாலை 7 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் இந்துக்கல்லூரி உப தலைமை ஆசிரியர் திரு S. K. செல்லையா அவர்கள் தலைமையில் சாவகச்சேரியிலுள்ள சாராயக் கடை நீக்கத்துக்கு வாக்கெடுப்பு நடத்தும்பொருட்டு ஒரு பகிரங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அத்தருணம் வித்துவான் திரு. M S. சபாரத்தினம் அவர்கள் இலக்கிய ஆதாரங்களுடன் இந்திய நாட்டு உதாரணங்களை எடுத்துக் காட்டியும், மதுவிலக்கு மகாசபைக் காரியதரிசி திரு. K. நவரத்தினம் அவர்கள் மதுவிலக்கு அனுபவங்களை எடுத்துக் காட்டியும் திரு. ச. தியாகராசா அவர்கள் அறநெறியை எடுத்துக் காட்டியும் திரு. N. அருணுசலம் அவர்கள் சாவகச்சேரிப் பட்டின வாசிகளின் மனநிலையை எடுத்துக் காட்டியும், மதுவிலக்கு மகாசபைத் தலைவர் Dr. C. குருசாமி அவர்கள் மதுவிலக்குத் தொடர்பில அரசாங்கப் பகுதியாரின் மனக் குறிப்பை எடுத்துக் காட்டியும் பேசினுர்கள்.

திரு. அருணுசலம் திருவாளர்கள் V. கனகசபை R. கனகசபை ஆகியோர் சில சந்தேக உரைகளைக் கூற திரு. நவரத்தினம் அவர்களும் Dr. குருசாமி அவர்களும் யாவரும் மகிழ்வெய்துமாறு நிவிர்த்திமொழிகள் கூறினர்.

பின்னர் வாக்கெடுப்புக்கு வேண்டுவன புரியுமாறு வட்டாரத்துக் கிருவாக மேலும் தேவைப்படும் அங்கத்தவரைக் கூட்டும் அதிகாரத்துடன் 16 அங்கத்தவரையுடைய ஒரு திருவாக சபை ஏகமனதுடன் நிறுவப்பெற்று மாலை 9 மணியளவில் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

## சமய தீட்சை

14-11-52 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை யாதாவில் பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் பிறருக்கும் ஷை சபையினது நாவலர் மண்டபத்தில் நீராவிமடம் ஸ்ரீமத். ந வைத்தியநாதக் குருக்கள் அவர்களால் சமய தீட்சை செய்யப்பெறறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடலை மறந்து வாழ உணர்தல் வேண்டும்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் சைவம் செழிக்கக் கூட்டுப் பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கூறினர்.

### ஏரூர்

ஏரூரிலே பேசும்பொழுது தமிழ் பேசும் ஒவ்வொருவரும் தமிழைப் பாதுகாக்க வேண்டும். முஸ்லீம்கள் தமிழரே. ஆகையினாலே தமிழைப் பாதுகாப்பது முஸ்லீம்களின் கடன். எல்லோரும் ஓர் குலமும் ஓர் இனமும் என்பதை மறக்கக்கூடாது என்று யோகிகள் கூறினர்.

### மட்டக்களப்பு ஆனைப்பந்தி

மட்டக்களப்பு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோயிலிலே சுவாமிகள் பேசும்பொழுது மிருகங்களைப்போல வாழாது நாம் எப்படி வந்தோம்? ஏன் வந்தோம்? என்ற கேள்விகளைக் கேட்டுப் பிறவிப்பயனாகிய பெரும் பொருளைப் பெறுதல் வேண்டும்! எம் உள்ளத்தின்கண்ணே நடயாடுகின்ற கூத்தப் பெருமானைத் தேடி அடையவேண்டும்.

உலகிலுள்ள மதங்களெல்லாம் இறைவனையடையவே வழிகாட்டுகின்றன! புத்தர் தருமத்தையும், இயேசு அன்பையும், நபிகள் தெய்வ வழிபாட்டையும் வழிகளாய்க் காட்டினார்கள். இவை எல்லாவற்றையும் தன்னகத்தே அடக்கியுள்ளது சைவ சித்தாந்தம்! சைவ அநுட்டானத்தின் முதலிரு படிகளாகிய 'சரியை' 'கிரியை' களிலே ஏனைய மத வழிபாடுகள் அடங்கிவிடுகின்றன! ஆனால் சைவமோ இவற்றைக் கடந்து யோக ஞானங்களாகிய மேற் படிகளுக்குச் செல்லுகின்றது. இதன் பெருமையை உணரவேண்டும்! அப்பர் மாணிக்கவாசகர் முதலாம் குரவர்களுடைய அருட்பாடல்கள் வழிகாட்டுகின்றன.

பரிசுத்த மனத்துடன் தியானம் செய்தால் இறைவனை அடையலாம்! இந் நிலைமையெய்துதற்கு உலகத்தைக் கோயிலாகவும் உள்ளத்தை மூர்த்தியாகவும் கொண்டு நாம் சேவை செய்ய வேண்டும்! மக்களின் மடமை, வறுமை முதலியவற்றை நீக்குமாறு செய்யும் சேவை சிவ சேவையாகும்!! என்றுகூறினார்கள்.

# நாரந்தனைச் சைவ மகாசபை

## அம்பாள் ஆலயக் கட்டிட நிதி

### சைவப் பெருமக்களே!

யாழ்ப்பாணம் தீவுப் பகுதியைச் சேர்ந்த நாரந்தனை என்னும் கிராமத்தின் வடபாலிலே பண்டாரப்புலம் என்னும் தானத்தில், சில மாதங்களுக்கு முன் 'தேவி விக்கிரகம்' கண்டெடுக்கப்பட்டமையும், அக் காலந்தொட்டு அவ்விடத்தில் சைவநன்மக்கள் வழிபாடு செய்து வருவதையும் நேரிலும் பத்திரிகை மூலமும் இலங்கைச் சைவமக்கள் அறிந்திருக்கலாம். குறித்த திருவுருக் கண்டெடுக்கப்பட்ட தானம் முற் காலத்தில் சைவத்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவனவாய் மேற்படி திருவுருவமும் அத்திருவுரு கண்டெடுக்கப்பட்ட தானமும் அதன் அயற்புறங்களும் அமைந்துள்ளன.

நாரந்தனையில உள்ள சைவமக்களும் அயலூர்களிலுள்ள சைவ அபிமானிகளும் இந்தப் புராதன புண்ணிய தானத்திலே ஒரு தேவி ஆலயத்தை அமைக்க வேண்டும் என்ற வேணவாப்பூண்டவர்களாய் இருப்பதோடு அதற்காய பணிகளைச் செய்ய முற்பட்டுள்ளார்கள. அவர்கள் இன்றுவரையுஞ் செய்த கடன்கள்:—

1. நாரந்தனையில் சைவ மகா சபை ஆரம்பிக்கப்பட்டமை.

2. அரசினரிடமிருந்து ஆலயமமைக்க 2, ஏக்கர் நிலம் பெற ஒழுங்கு செய்தமை.

(ஷ சபைக்கு 2 ஏக்கர் நிலம் தருவதாக அரசாங்கம் சம்மதித்து 11-7-52 அரசினர் கெசற்றில பிரசுரித்துள்ளது.)

3. நிலத்தைப்பெற — ஆலயமமைக்க கீழே கையொப்பமிட்ட பொறுப்பாளர்சபை (Trustee) தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(4) இரண்டு வருடகாலத்துள் பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத செலவுடன் ஆலயத்தை அமைப்பதாக சைவமகா சபை அரசாங்கத்திற்கு உறுதி கூறியுள்ளது.

சைவநன்மக்களே:—

"திருக்கோயிலில்லாத்
திருவிலூரும்"
"மூர்த்தி தலந் தீர்த்தம்
முறையாற்றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே".
"திருநீ றணியாத நெற்றியைச்
சுடு"
"சிவாலய மில்லாத ஊரைக்
கொளுத்து"
"ஆலயந்தொழுவது சாலவும்
நன்று"

என்ற திருவாக்குகளை உணர்ந்த சைவத் தமிழர் வழிவந்த அன்பர்களே!! உலகம்-உலகத்துப் பொருள்களையே எந்நேரமும் நினைத்துக் கொண்டிருக்கும், முற்றுணர்வுடையோர் அல்லாராய நமக்குத் திருக்கோயில் வழிபாட்டைத் தவிரக் கடவுளை நினைந் துருகுவதற்கு வேறு வழி சிறிதுமேயில்லை. ஆதலால் நாரந்தனைச் சைவ மகாசபையார் தேவியாலயம் அமைக்க முற்பட்ட இப்பெருஞ் சிவபுண்ணியத்திற்குத் தங்கள் தங்களாலியன்ற பொருள் உபகரித்துப் பராசக்தியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றேம்.

'நிதிமிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவுமற்றவர் வாய்ச் சொல்
அருளீர்;
ஆண்மையாளர் உழைப்பினை
நல்கீர்,
எதுவும் நல்கியிங் கெவ்வகை
யானும்
இப்பெரும்பணி நாட்டுவம்வாரீர்"

பணமனுப்புமன்பர்கள், நேரிலோ மணியோடர் அல்லது போஸ்ரல் ஓடர்மூலம் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேம். பணத்துடன் பத்திரமும் தவறாது அனுப்பப்பட வேண்டும் என்பதை மீட்டும் ஞாபகப்படுத்துகின்றேம்.

இங்ஙனம்,
தங்கள் பணியுள்ள

தலைவர், நா. நடராசா
சி. கைலாயபிள்ளை,

காரியதரிசி
வி. நமசிவாயம்

தனாதிகாரி
சைவமகாசபை நாரந்தனை
Kayts.

பொறுப்பாளர் சபை (*Trustees*)

1. த. தில்லைநாதர்
2. நா. நடராசா
3. வி. நமசிவாயம்
4. க. கணபதிப்பிள்ளை
5. சு. சண்முகம்
6. [illegible]
7. வ. தண்ணுத்துரை.

### விற்பனைக்கு

பாக்கர் (51)

திறமான புதுப் பேனா பாக்கர் (*51*) ஒன்று விற்பனைக்கு இருக்கிறது. தேவையானோர் பின் வரும் விலாசத்திற் பார்வையிடலாம்.

நம்பர் 1
C/o இந்துசாதனம்

## பொருள் அறிய மொழி உபயோகிக்கப்பட வேண்டும்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருங் காப்பியங்கள் அழகுடன் கூடிய அன்னியப் பொருள் பரப்பும் பிரசார நூல்களாயின. 'எழுத்தும் சொல்லும் பொருள் அறிதற்கே' என்ற தமிழன் பாரம்பரை 'நாம் வேண்டுவது சொல்லழகு, வருணனையழகே' எனும்படியாயிற்று.

புத்துயிர் பெற்ற சிந்தனைச் செல்வர்கள் அரசியல், பொருளாதார பலம் பெற்றுக் கலாசார வாழ்வையும் கைப்பற்றி யிருந்த அந்நியக் கலாசாரத்தைத் தமிழகத்தைவிட்டு அகற்றினர். தமிழினம் மறுமலர்ச்சியுற்றது அம்மலரச்சியின் சிகரத்தில் தோன்றியதே கம்பராமாயணம். தமிழினம் விழித்தபின் அநேக நூற்றாண்டுகள் சென்ற பின்பே அப்பெருநூல் எழுந்தது. சங்கத் தமிழனின் சிகரமாயமைகின்றது திருக்குறள்.

தமிழ் மொழியைப் பிறமொழிகள் அடிமையாக்க முயன்று தோல்வியுற்ற கதையும் இக்கலாசார வரலாற்றின் ஓர் பாகமே. சமண நூல்கள் மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டன. பின் நம்மவரும் எழுதினர். புதிய இலக்கண விதிகள் செய்தனர். ஆனல் தமிழர் பிற்காலத்தில் தமக்கு வேண்டியது எது எனத் தீர்மானித்து விட்டனர். காலவெள்ளத்தில் கலாசாரம் என்ற பெயர்சூடி மிதக்கும் தோணிகள் மெய்யானவையா, சிறுா விளையாட்டுக் கப்பல் போன்றவையா எனக் காணலாம்.

இன்று மேல்நாட்டுக் கலாசாரம் புகுத்த முயற்சிப்பதும், ஆங்கிலத்தை இங்கு தமிழுடன் இணையரசியாக்க முயல்வதும் வீண் செயல்களேயெனச் சரித்திர நோக்குடையவர் உணர்வர். ஆகவே தமிழ் மொழியானது தன் தனிச்சிறப்புடன வளரவும் தமிழ்மொழி தரும் வாழ்க்கைப்பண்பாடு எம் நாடெங்கும் பரவி நிலவவும் ஆவன புரிதல் அறிஞர்மீதுள்ள பெருங் கடனாயிருக்கின்றது.

### கற்றவர்க்கழகு கசடற மொழிதல்

மாணவர் மன்றம்

# அறிவு வளர இறைஉணர்ச்சிபெருகும்!

— மாணவன் செ. சி. பரமேஸ்வரன் எழுதியது —

"கடவுள் உண்டா? இல்லையா?" என்று கேட்டாராம் ஒருவர். "உண்டு!" என்று பதில் வந்ததும், 'அப்படியானல் நிரூபி" என்றாராம். "இதோ நிரூபிக்கின்றேன்! 'க-ட-வு-ள்-'! விளங்கவில்லையா? 'க்' கென்ற மெய்யெழுத்தும் 'அ' வென்ற உயிர் எழுத்தும் சேர 'க' என்ற எழுத்து வரும். இதே போன்றுதான மற்றவையும் சந்தேகமாயிருந்தாற் றமிழிலக்கணப் புத்தகத்தை எடுத்துப் பாரும்" என்றாராம் மற்றவர்.

மேல்நாட்டறிஞர் ஒருவர் சொல்கின்றார்:- "கடவுள் உண்டென்று சொல்பவன் முட்டாள்; கடவுள் இல்லையென்று சொல்லுகிறவனும் ஒரு முட்டாள்!" என்று

"ஒன்றே யென்னில் ஒன்றேயாம்;
பலவென் றுரைக்கில் பலவேயாம்;
அன்றே யென்னில் அன்றேயாம்;
ஆமே யென்னில் ஆமேயாம்;
இன்றேயென்னில் இலனேயாம்;
இல தென்றுரைக்கில் இலதேயாம்;
நன்றே நம்பி குடிவாழ்க்கை,
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா!"

என்று சொல்லிவிடுகின்றார் நம் கவிச் சக்கரவர்த்தி கம்பரும், கடவுளைப்பற்றிப் பேசும்போது, இவற்றையெல்லாம் பார்க்கும்போது நமக்குப் புலப்படுவதென்ன? கடவுட் கொள்கையைப்பற்றிப் பேசுவது ஒரு கஷ்டமான - சிக்கலான விஷயம் என்பதுதான்!

'கடவுள் உண்டு' என்கிற கட்சியும், 'இல்லை' யென்கிற கட்சியும் உலகில் எங்கும் உண்டு. 'அது உண்மை! இது பொய்' யென்றும், 'அது பெரிது இது சிறிது' என்னும் சண்டைகள் வேறு. ஆகவே இதைச் 'சிக்கல்' என்று ஆராயாமலிருக்க முடியாது மனித சமுதாயத்தின் ஆதி நிலையென்ன? எப்படி நாகரீகங்கள் வளர்ந்து வளர்ந்து சமுதாயம் இன்றைய நிலைக்கு வந்தது என்பவை யெல்லாம் நமக்குத் தெரியும்.

ஆதி மனிதன் மிருகங்களைப் போலவே வாழ்ந்தான். அலங்கார உடைகள், தொழில்கள், மொழிகள் இவை யொன்றையும் அவன் அன்று அறியமாட்டான். அப்போ தவனுக்கு ஒரேயொரு கவலைதானிருந்திருக்கலாம். உணவுக் கவலை, (இன்றைக்கும் அது தீர்ந்தபாடில்லையல்லவா?) காய் கனிகளைப் பச்சையாகவே சாப்பிட்டான். கல் தடி முதலியவற்றிலிருந்து ஆயுதங்களைச் செய்து மிருகங்களை வேட்டையாடினன். மழை வெயிலிலிருந்தும், பயங்கர மிருகங்களிடமிருந்தும் தப்பித் தக்கொள்ள மலைக் குகைகளில் வாழ்ந்தான் ஒருவனை ஒருவன் சந்தித்தபோது தங்கள் எண்ணங்களை ஒருவருக்கொருவர் வெளியிடவேண்டியிருந்தது. அந்த எண்ணங்கள் செய்கைகளுக்கேற்ப ஒலிகளைக் கிளப்ப ஆரம்பித்தனர். அதாவது அரைகுறைப் பேச்சு. மனித சமுதாயத்தின் ஆதி நிலை இது. இந்த நிலையில் அப்போது கோவில்கள், சிற்பங்கள், வேத-உபநிடதங்கள் ஒன்றுமே உருவாயிருந்திருக்க முடியாதென்பது வெளிப்படை.

மனிதனுடைய அறிவு எந்த நேரமும் வேலை செய்து அவனைச் சுகமான வாழ்க்கைப் பாதைக் கிழுத்துக் கொண்டேயிருந்தது. மற்ற உயிர் வர்க்கங்களை விடத் தான் உயர்வு என்பதை அவன் விளக்கிக் கொண்டான். தன்னிலும் பலம்மிகுந்த மிருகங்களைக்கூட அவன் அடக்கிவைக்க முடிந்தது. ஆனல் உலகில் வெள்ளமும, இடியும், புயலும், பூகம்பமும், எரிமலையும் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தன. அவற்றை இல்லாமலழித்துவிடவோ, அவற்றை மீறி நடக்கவோ தன்னல் முடியாதென்பதை உணர்ந்தான் அவன். ஆகவே அவற்றிற்குப் பயந்து பணிந்து வணங்க ஆரம்பித்தான். தன்னைக் கஷ்டப்படுத்தாமலிருக்கும்படி வேண்டிக் கொண்டான் அவற்றிடம்.

மனித சமுதாயத்தின் ஆதிக் கடவுள் வணக்கம் பிரார்த்தனை என்பன இவையே, வருணதேவன், வாயுதேவன், அக்கினிதேவன் பூமாதேவி எனறெல்லாம் இன்றும் நாம் வணங்குகின்றோமல்லவா?

பின்பு மனிதன் மண், கல் தடி, இலை இவற்றைக் கொண்டு தன் வசதிபோல் வாசஸ்தலங்களை அமைக்க அறிந்துகொண்டான். தடி - கல் ஆதியனவற்றிலிருந்து தீ உண்டாக்கி காய் கிழங்குகளை வேக வைத்து உண்ணவும் தெரிந்துகொண்டான். கொடி - செடிகள் முளைத்தல், வளர்த்தல், பயன் தருதல், அழிதல் ஆகியவற்றைக் கவனித்து அவற்றிலிருந்து உணவைப்பெற அவற்றைவளர்க்க ஆரம்பித்தான். விவசாயத் தொழிலை மனிதன் கண்டுபிடித்துவிட்டான். மிருகங்களின் தோல்கள் மரப்பட்டைகள் ஆகியவற்றை உடையாக்கிக்கொண்டான. அரை குறை ஒலிகளுக்கு எழுத்துவடிவம் கொடுத்துத் தன்எண்ணங்களை வெளிப்படுத்தினன். இதுதான் மொழியின் ஆரம்பம்.

இவ்விதம்எல்லாத்துறைகளிலும் வேலைசெய்த அறிவானது அவனது கடவுட்கொள்கையில் மட்டும் பேசாமலிருந்து விடுமா? ஆராய்ந்து கொண்டேயிருந்தது.

அக்கினிதேவன், வாயுதேவன், வருணதேவன், அதாவது நெருப்பு காற்று நீர் ஆகியவை யெல்லாம் தனித்தனிபாக இயங்கினலும், அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை, எல்லாம் இயற்கையென்ற ஒரேசக்தியின் தோற்றங்கள், நெருப்பு நீர் காற்று மண் ஆகாயம் ஆகிய இந்த ஐந்து சக்திகளும் எங்கும் என்றும் இயங்கிக்கொண்டேயிருக்கின்றன. என்பதெல்லாம் அவனுக்கு விளங்கின. அதை வழிபட ஆரம்பித்தான் அவன்.

மிருகங்கள் அன்றுபோலவே இன்றும் வாழ்ந்து வருகின்றன. குரங்குகள் மரத்திலேயே வசித்தன. மீன்கள் கடலிலேயே இருக்கின்றன. பாம்புகள் புற்றிலேயே வாழ்கின்றன. ஆனல் மனிதன் மட்டும் அறிவின் துணையுடன் படிப் படியாகச் சுகவாழ்வை நோக்கி முன்னேறினன். மலைக் குகையில் வாழ்ந்தவன் இன்று மாட மாளிகையில் வாழ்கின்றன. ஆதியில் நிர்வாணியாயிருந்து பிறகு மாவிலை-பட்டைகளை அணிந்தவன், இன்று பட்டாடை பூண்டு மகிழ்கின்றான். அன்று மிருகங்களைப் போல் வெறும் ஒலிகளைக் கிளப்பியவன் இன்று இலக்கண வரம்புள்ள மொழியில இலக்கியங்களும், காவியங்களும் சிருட்டிக்கிறான்.

இவ்விதமே அவனது கடவுட் கொள்கையும் படிப்படியாக வளர்ந்து வந்தது. குரூரமான அசுரர்கள்(கொடியோர்)தோன்றி மக்களை வருத்தும்போதெல்லாம் இறைவனும் மனித உருவில் வந்து அவர்களோடு போர்புரிந்து அவர்களை அழிப்பதாகத் தங்கள் அநுபவத்துக்குத் தக்கவாறு பாடினார்கள். இதனல் கடவுளைப்பற்றிப் பல பல கதைகளும், கடவுளுக்குப் பல பெயர்களும, உருவங்களும் ஏற்பட்டன. பிரமதேவர் உலகைப் படைத்ததாகவும், விஷ்ணுமூர்த்தி உலகைக் காக்கப் பல அவதாரங்கள் எடுத்ததாகவும், சூரபத்மன் என்ற அசுரனை அழித்து சுரர்களைக் காக்க முருகக் கடவுள் பிறந்ததாகவும் பல கதைகள் உண்டு.

இவ்வாறாக அறிவு வளர்ந்து இன்று பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மை உணர்ந்து இறைவன் திருவருளைப் பெற்று மானிடப்பிறவியின் பெரும் பயனையடைதற்கு அருகராயினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியா பகுதியின் விவேகம்

எட்டாம் வகுப்புப் பரீட்சை வினுக்களுக்கு வித்தியாபகுதியார் வெளியிட்ட விடைகளுள் கணக்கு, விவேக பரிசோதனை ஆகியவற்றின் விடைகள் பிழையென, கல்முனைப்பகுதியிலுள்ள நாலு தமிழ்த் தலைமை ஆசிரியர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனராம். வித்தியா பகுதியாரின் விவேகத்துக்கு இது ஓர் தக்க சான்ருயமைகின்றதென்னும் கருத்துப் பரவுகின்றது.

## சற்பிரசங்கம்

கடந்த 7-11-52வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் பண்டிதர் சு. இராமசுவாமி அவர்கள் 'தேவாரச் சிறப்பு" என்னும் விஷயத்தைப் பீடிகையாகக்கொண்டு கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் பிரசங்கஞ்செய்தார். அவர் பேசும் போது தேவார திருவாசகங்களைச் சைவ அன்பர்கள் கிரமமாக ஓதி வருவார்களாயின் ஆணவபலத்தின் வலி இன்றி திடபக்தியுடையவர்களாய் இறைவன் திருவருளைப்பெறுதல் சாலுமென்றும் பிறவிப்பயனுகிய பேரின்பவாழ்வைப் பெறலாம் என்றுங் குறிப்பிட்டார்.

## கோட்டு விற்பனவு

வீரகத்திப்பிள்ளை இராசரத்தினம் தொண்டமனூர். —வழக்காளி.

VS.

No, 7541.

கந்தையா கைம்பெண் சிவக்கொழுந்து பத்தைமேனி —எதிரி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 7541 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ் காணப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1952 - ம் ஆண்டு மார்கழி மாசம் 27 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணி அளவிலும் பிற்பகல் 4 மணிக்கும் அந்த அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

1-ம் காணி விற்பனவு 1952ம் ஆண்டு மார்கழி மாசம் 27 ம் திகதி சனிக்கிழமை பகல் 9 மணிக்கு.

(1) அச்சுவேலியைச் சேர்ந்த பத்தைமேனி என்னுமிடத்தில் பறையன் காவலடியும் சங்கிலி சீமாவும் என்னும் காணி கி. இ. 4 குளி. 4. கல்வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும்.

எல்லை கிழக்கு ரோட்டு.
எல்லை வடக்கு முமலிங்கம் பெண் இராசம்மாவின் ஆதனம்.
எல்லை மேற்கு சுந்தரம் பெண் செல்லாச்சியின் ஆதனம்.
எல்லை தெற்கு மயில்வாகனம் ஏகாம்பரநாதனின் ஆதனம்.
இவையடங்கலும்.

2-ம் காணி விற்பனவு 1952ம் ஆண்டு மார்கழி மாசம் 27ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு

பச்சிலைப்பள்ளியைச் சேர்ந்த வண்ணான் கேணியில் இன்னுசி மறைக்காடு என்னும் காணி கி. இ. 104 குளி. $2\frac{1}{2}$ தென்னம்பிள்ளைகளும் வீடும் கிணறும்.

எல்லை: கிழக்கும் மேற்கும் ஒழுங்கை.
வடக்கு ரோட்டு.
தெற்கு றெயில்வே லையின்
இதில் சொரியலாக $\frac{1}{2}$ பாகு.

V. A. துரையப்பா,
Commissioner and Valuer,
Jaffna, etc., etc.
15-11-52.
M. 170 18-11-52.

## தம்பலகமத்தில் ஸ்ரீசுத்தானந்தர்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

க்க வேண்டியது உங்கள் கடமையாகும்.

குடும்ப வாழ்வின் பரிபூரணத்துக்கு மனைவி முக்கியம். மனைவி வீட்டுக்காசி. இராமகிருஷ்ணர் மனைவியைத் தெய்வமாக மதித்தார். பராசக்தியே சாரதாமணி தேவியாகப் பிறந்து மனைவியாக அமைந்தார் என்று கூறலாம். நான் சாரதாமணி தேவியாரைப் பார்த்திருக்கிறேன். உங்களுக்குப் பிரியமானது எது என்று கேட்டதற்குப் பகவானையே குறிப்பிட்டுவிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணரைத் தான் பகவானுக மதிப்பதாகக் கூறினுர்கள். பகவான் சாரதா மணியைத் தவத்துக்காகப்பழக்கினுர் தெய்வமாக வணங்கினுர் பெண்ணைச் சக்தியாக வழிபடுவது நம்நாட்டின் மாபு. ஆணும் பெண்ணும் தவக்கனலைப் பெருக்கி பிரமச்சரியத்தை அனுட்டித்து நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும். நான்கு குழந்தைகளுக்கு மேலாவது பிரமச்சரியத்தைக் கைக்கொள்வது சிறந்தது. ஆண் பெண் வாழ்க்கை சிவசக்தி சாதனமாகும். இதனுல் பெண்மை பெருமை பெறுகிறது.

வித்தியாலயத்துக்கு அத்திவாரம் இட்டாகிவிட்டது. வீரர்களது எலும்பாகிய அஸ்திவாரம் இட்டு வீரமாளிகைகளை கட்டுவது அக்கால வழக்கம் இன்று நாம் அன்புறுதியாகிய கல்லை நாட்டியிருக்கிறோம். தாய்மார்களாகிய நீங்கள் கொடுக்கும் பிடி யரிசியைக் கொண்டே இந்த மாளிகை அழகுற அமைய வேண்டும். இந்த மாளிகையில் தமிழ் வேதங்கள் ஓத வேண்டும். பெண்கள் சன்மார்க்க விஷயமாக வாரந்தோறுங் கூடிப் பேசவேண்டும். ஒருவர் நல்ல நூல்களை வாசிக்க மற்றவர்கள் கேட்கலாம். பெண் கல்விக்கான எல்லா வேலைகளும் இங்கு நடைபெறவேண்டும். தோட்ட வேலைகள் கூட நடைபெறலாம். விளையாட்டுமிக முக்கியம். மகான்கள் உலகுய்ய வழிகாட்டுகிறுர்கள். மகான்களின்மூலம் பின்னுலுள்ள திருவருட்சக்தியை நாம ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பரமகம்ஸர் சாரதாமணி ஆகியோர் காட்டிய வழியில் நாம் இறைவனைக்கண்டு உய்வடைய வேண்டும். இந்த வித்தியாலயம் எல்லோருக்கும் வழிகாட்டுமென்று நம்புகிறேன். அதற்காகப் பிரார்த்திக்கிறேன். சுவாமிகள் கடைசியில் எல்லோருக்குஞ் சொல்லிக்கொடுத்த மந்திரம் வருமாறு:-

சுத்தசக்தி, சுத்தசக்தி, சுத்தசக்தி,
ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி, சுத்தசக்தி,
ஓம்சிவம்
ஓம்சிவம் சிவோகம் சிவமயம்
ஓம்சிவம் சிவோகம் சிவமயம்


### விற்பனைக்கு

யாழ்ப்பாணம இந்து பெண்கள்கல்லூரிக்கும், ஆண்கள் கல்லூரிக்கும் கிட்ட வீட்டு நிலம் 17 பரப்பு வரையில் விலைபரப்பு ஒன்று நூபா 2000

விபரத்துக்கு
கேட்காண்பவருக்கு எழுதவும்
T. நடராசா பிறக்டர்
31, பேறிவிதி கொழும்பு 12

நீங்கள் இளமைப் பருவத்தை யடைய
சி. எம். சாமி
தங்க பஸ்பம்
உபயோகியுங்கள்
தாதுபுஷ்டியைத் தருவதில் சிறந்தது.
இதற்கு நிகராலமருந்து வேறு ஒன்றுமில்லை.
அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், இரதத விருத்தியும் உண்டாக்கும். இல்வாழ்க்கையில் அதியற்புதசுகந்தரும. நீரழிவு பவுத்திரம், மூலம், குன்மம, இடுப்புவலி, வாய்வு, வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு முதலிய சகல வியாதிகளையும் நீக்கும,
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ.25—0—0
குருபஸ்பம் (தொய்வுக்கு)
தோய்வு, இருமல், ஈளை, கபம், காசம், மார்துடிப்பு தொண்டைவலி, க்ஷயம் முதலிய சகல வியாதிகளையும நீக்கும்.
அருமையானது.
24 நாள் புட்டி 1க்கு விலை ரூபா 20
மலையப்பசாமிவைத்தியசாலை பழனி S I
(கியாட்லாக் இனும்)
M. 16, 25-4-52—25-10-52.

சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும்
# சுசீலாவின் காதல்
யாழ். நகர மண்டபத்தில்
ஐக்கிய இயக்க உத்தியோகத்தர்களால்
1952-ம் ஆூ
மார்கழி மீ 6-உ சனிக்கிழமை
சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக
மிக விமரிசையாக நடத்தப்படும்

திறமான தேக்க மரங்கள் பல தினிசுகளிலும்
திறமான ருணிமார்க் ஓடுகள் $13\frac{3}{4}$, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி
1918-ம்ஆூ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பஙகுகள் எந்த நேமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாஙகவுமான விசேஷ ஒழுஙகுகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப்பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday November 18 1952

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org